# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 187 /பேரூ/2025**
**நாள் : 04.07.2025**

திரு. C. ஆனந்த்,
கோம்பை,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், கோம்பை இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. C. ஆனந்த் என்பவர் 04.06.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ள மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடுத்த W.P. (MD) No.13719 of 2025 வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் **30.04.2025** நாளிட்ட தீர்ப்புரையில் வழங்கிய ஆணையை நிறைவேற்றும்பொருட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், கோம்பை அஞ்சல், பஞ்சாயத்து போர்டு ஆபிஸ் பின்புறம், சௌடம்மன் கோவில் தெரு, கதவு எண்.12-1- 13G/2, என்ற முகவரியை சேர்ந்த C. ஆனந்த் என்பவர் தனது **18.04.2025** நாளிட்ட மனுவில் தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 12ல் கட்டப்பட்டுள்ள கழிவுநீர் கால்வாயின் உயரத்தை குறைக்க வேண்டி கோரப்பட்டது.

மேற்காணும் புகார் மனுவானது 2015-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறைகேடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளின் விதி 4 மற்றும் 6-ன்படி படிவம் 1-ல் உரிய ரூ10-க்கான நீதிமன்ற கட்டணவில்லை இல்லாததால், படிவம் 1 உடன் ரூ.10-க்கான நீதிமன்ற கட்டணவில்லை ஒட்டி புகார் மனுவினை

இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்குமாறு நடுவ கடித எண். 625/பேரூ.2025-1, நாள் 24.04.2025ல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் மனுதாரர் தனது 18.04.2025 நாளிட்ட மனுவில் கோரியுள்ள கோரிக்கை குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு ( W.P. (MD) No.13719 of 2025) தொடரப்பட்டு, அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு தனது 30.04.2025 நாளிட்ட ஆணையில் மனுதாரரின் 18.04.2025 நாளிட்ட மனுவினை 12 வார காலத்திற்குள் ஆய்வு செய்து, சட்டவிதிகளுக்குட்பட்டு உரிய ஆணையினை வழங்குமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்காணும் உயர்நீதிமன்ற ஆணையின் நகலை மனுதாரர் தனது 04.06.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்து இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

2. மனுதாரர் திரு. C. ஆனந்த் என்பவர் தனது 18.04.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" I respectfully state I am residing in the above address, a law abiding citizen and working in Army. I am residing in the present address for more than 20 years. The house presently we are residing has been constructed by my father with the hard earning made by father for 32 years and myself 24 years in the Indian Army Service. While the matter stood thus to favor a politician individual the official has constructed drainage in our lane viz., 12th ward, Behind/Near Panchayat Board Office/Near my house/way to water tank, Kombai, Theni District at a height of 3 feet above the road by flaunting the rules and regulations in this regard.

I respectfully state that the drainage water is clogging in the recently constructed drainage itself due to the height of 3 feet the same being constructed and the drainage is not even passing through the said channel. In these circumstances one Mr. Jagir Hussain belonging to our area had continuously made a representation to the authorities concerned to lay the drainage by reducing the height of the same and also to take appropriate action against the erring individual for almost more than 2 years. Despite the repeated representations made by him no results fetched for the reasons best known to the officials.

Respectfully state that the drainage channel constructed by the officials is nothing but a wasteful exercise as the drainage in the said channel is clogged and does not even drain. But our main concern is that the clogging of the drainage that too at the level of house is causing huge stench smell causing several health issues in and around our locality. Due to the bad smell emitted by the drainage we were not able to reside in our house and was not even able to sleep peacefully during night hours and had been violating our fundamental rights guaranteed by the Constitution of India.

I respectfully state that the drainage channel laid by official is not in accordance with the approved permission and the same was not constructed as per the approved plan of the officials Engineer plan. The drain channel had been constructed on the whims and fancies of the officials and deviation of the original engineers plan. Hence I had made an application under the Right to Information Act, 2005 seeking for relevant

plan and other particulars from the concerned offices. Even after receiving the same no information whatsoever had been furnished to me for the reasons best known to them.

Hence I humble pray your good self to take necessary action against the Block Development Officer, Uthampalayam and the Executive Officer, Kombai Town Panchayat regarding construction of drainage channel at a height causing health and other issues to the general public as early as possible".

3. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.06.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

4. கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. சுருளிவேல் என்பவர் தனது 13.06.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 381/2024-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

தேனி மாவட்டம், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி வார்டு 9, சௌடம்மன் கோவில் தெரு மற்றும் அதற்கு பின்புறம் உள்ள குடியிருப்பு அனைத்தும் அபிவிருத்தியான புதிய குடியிருப்பு பகுதி ஆகும். புதிய மழைநீர் வடிகால் அமைப்பது மிகுந்த அத்தியாவசிய பணி என்பதால், கோம்பை பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 08/2021, நாள் 03.02.2021-ன்படி வடிகால் அமைக்கும் பணி தேர்வு செய்யப்பட்டு, பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி 2019-2020-ஆம் ஆண்டு அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது.

மேலும், மனுதாரரின் குடியிருப்பு பகுதியானது சாலை மட்டத்திற்கும் கீழ் அமைந்துள்ள தாழ்வான பகுதியாகும். புதிய கட்டப்பட்ட வடிகாலானது மெயின் வடிகாலின் உயரத்திற்கு ஏற்றவாறு மழைநீர் வடிந்து செல்லுமாறும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கிலும் அமைக்கப்பட்ட வடிகாலினை, வடிகாலின் உயரம் அதிகமாக உள்ளது என புகார் தெரிவித்துள்ளார். அரசின் திட்டப்பணி என்பதால், செய்து முடிக்கப்பட்ட வடிகாலின் உயரத்தை குறைத்திட இயலாத நிலை உள்ளது.

மேலும், மனுதாரரால் மக்கள் குறைதீர்க்கும் நாள் மனு எண். TN/MAWS/THN/I/EMAIL/07APR25/11416758-ல் புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடிகால் சீரமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பதில் வழங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 15-வது நிதிக்குழு மான்யத் திட்டத்தின் கீழ் வார்டு. 9 சௌடம்மன் கோவில் தெருவில் வடிகால் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், உயர் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு, வழங்கப்பட்ட அறிவுரையின்படி மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்ட வடிகாலினை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 26.06.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.06.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. C. ஆனந்த் என்பவர் 26.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- தேனி மாவட்டம், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 12-வது வார்டில் பேரூராட்சி அலுவலக பின்புறம் மற்றும் தனது வீட்டின் அருகில் சமீபத்தில் கட்டப்பட்ட கழிவுநீர் வடிகாலை சாலையின் மேலே இருப்பதால் கழிவுநீரானது கால்வாய் வழியாக சீராக செல்லாமல் அடைப்பு ஏற்படுகிறது.
- கழிவுநீர் வடிகாலானது சாலைக்கு மேலே 3 அடி உயரத்திலும், தெருவில் அமைந்துள்ள வீடுகளுக்கு சமமாகவும் இருப்பதனாலும், அடைப்பு ஏற்பட்டுள்ள கழிவுநீரால் எங்களது பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசி, பொதுமக்களின் சுகாதாரத்திற்கு சீர்கேடு விளைவிக்கிறது. இரவு நேரத்திலும் நிம்மதியாக உறங்க முடியவில்லை.
- மேற்காணும் உயரமாக அமைக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய் குறித்து எங்களது பகுதியிலுள்ள திரு. ஜாகிர் உசேன் என்பவர் கடந்த 2 வருடங்களாக புகாராக தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
- எனவே பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் வகையில் சாலையின் மீது 3 அடி உயரத்தில் கட்டப்பட்ட கழிவுநீர் கால்வாயை மறுசீரமைப்பு செய்து, கழிவுநீர் கால்வாயின் உயரத்தை சாலையின் மட்டத்திற்கு குறைத்தும், மேற்காணும் கால்வாயின் உயரத்தை தரை மட்டத்திற்கு மிகாமலும் செய்து பொதுமக்கள் நலனில் ஊறுவிளைவிக்காத வண்ணம் உரிய நடவடிக்கை பேரூராட்சியால் மேற்கொள்ள ஆவன செய்யுமாறு பணிவுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.
- மேற்காணும் பிரச்சனை மூலம் எனது குடியிருப்பு மட்டுமல்லாது எங்கள் தெருவில் அமைந்துள்ள அனைத்து குடியிப்புகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.
- இவ்வாறு விதிமீறி சீர்கேடு விளைவிக்கும் வகையில் கழிவுநீர் கால்வாயை அமைத்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

6. எதிர்மனுதாரரான கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. சுருளிவேல் என்பவர் 26.06.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- தேனி மாவட்டம், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 9, சௌடம்மன் கோவில் தெரு மற்றும் அதன் பின்புறம் உள்ள குடியிருப்புகள் அனைத்தும் புதிய குடியிருப்பு பகுதி என்பதால் 2019-20ஆம் ஆண்டில்

பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது.,

- இந்த வடிகாலானது பிரதான (Main) வடிகாலின் உயரத்திற்கு ஏற்றவாறு மழைநீர் வடிந்து சீராக செல்லும் வகையில் அமைக்கப்பட்டது.

- இந்நிலையில் மனுதாரரின் குடியிருப்பு பகுதியானது சாலை அமைந்துள்ள மட்டத்திற்கு கீழ் அமைந்துள்ள தாழ்வான பகுதி என்பதால், ஏற்கனவே அரசின் திட்டப்பணி மூலம் அமையப்பெற்ற வடிகாலின் உயரத்தை குறைத்திட இயலாத நிலை உள்ளது.

- இருப்பினும் இப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி, வார்டு 9-ல் உள்ள மனுதாரர் புகாராக தெரிவிக்கும் வடிகாலினை பொறியாளர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு, அவர்களின் அறிவுரையின்படி, மேற்படி வடிகாலினை 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் சீரமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, என பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

- மேற்காணும் விவரங்கள் மனுதாரருக்கும் மற்றும் சௌடம்மன் கோவில் தெருவில் குடியிருக்கும் பொதுமக்களுக்கும் 21.06.2025 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தேனி மாவட்டம், கோம்பை என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. C. ஆனந்த் தனது 18.04.2025 நாளிட்ட மனுவில் தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சிக்குட்பட்ட 9வது வார்டில் கட்டப்பட்டுள்ள கழிவுநீர் கால்வாயின் உயரத்தை குறைக்க வேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் மனு சமர்ப்பித்திருந்தார்.

மேற்காணும் புகார் மனு 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறைகேடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளின் விதி 4 மற்றும் 6-ன்படி படிவம்-1 உடன் ரூ.10-க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை என்பதால் அதனை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 24.04.2025 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதற்கிடையில் மனுதாரர் திரு. C. ஆனந்த் என்பவர் இப்புகார் மனு குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடர்ந்து, இவ்வழக்கில் (W.P.(MD) No. 13719 of 2025) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு 30.04.2025 நாளிட்ட ஆணையில் மனுதாரரின் 18.04.2025 நாளிட்ட புகார்மனு குறித்து மனுதாரர் திரு. C. ஆனந்த் என்பவரை விசாரணை மேற்கொண்டு, உரிய சட்டவிதிகளின் கீழ் 12 வார காலத்திற்குள் ஆணையினை இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்குமாறு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் 30.04.2025 நாளிட்ட ஆணையினை நிறைவேற்றும் பொருட்டு, மனுதாரரின் புகார்மனு குறித்து கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை பெறப்பட்டு, மனுதாரர் திரு. C. ஆனந்த் மற்றும் எதிர்மனுதாரரான கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களிடம் இம்முறைமன்ற நடுவத்தில் 26.06.2025 அன்று விசாரணை மேற்கொண்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கோம்பை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 9-வது வார்டில் சௌடம்மன் கோவில் தெருவில் உள்ள மழைநீர் வடிகாலானது 2019-20-ஆம் ஆண்டு அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பொறியாளர்களால் வகுத்துரைக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மேலும் மேற்காண் புதிதாக அமைக்கப்பட்ட வடிகாலானது பிரதான (Main) வடிகாலின் உயரத்திற்கு ஏற்றவாறு மழைநீர் சீராக வடிந்து செல்லும் வகையிலும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கிலும் வடிவமைக்கப்பட்டது எனவும், மனுதாரரின் குடியிருப்பு பகுதியானது, சாலை மட்டத்திற்கும் கீழ் அமையப் பெற்றுள்ள தாழ்வான பகுதி என்பதால் வடிகாலின் உயரத்தை குறைத்திட இயலாத நிலை உள்ளது எனவும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இருப்பினும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள குறைகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் தற்போது வார்டு எண். 9-ல், சௌடம்மன் கோவில் தெருவில் உள்ள வாய்க்காலினை பொறியாளர்களால் கள ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பொறியாளர்கள் அளித்துள்ள அறிவுரைகளின்படி 15-வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் மேற்படி வடிகாலினை சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய வருகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மழைநீர் வடிகாலானது பிரதான வடிகாலிருந்து மழைநீர் சீராக செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் மனுதாரரின் குடியிருப்பு தாழ்வான பகுதியில் உள்ளதால், வடிகாலின் உயரத்தை குறைக்க வழிவகை இல்லை எனவும் இருப்பினும் பேரூராட்சி பொறியாளர்களின் அறிவுரைப்படி 15-வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் வடிகாலினை சீரமைத்து, கழிவுநீர் தேங்காவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளவாறு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இருப்பினும், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 9-வது வார்டில் மனுதாரரின் வீடு அமைந்துள்ள சௌடம்மன் கோவில் தெரு பொதுமக்களின் சுகாதார நலத்தினை கருத்திற்கொண்டு வடிகாலின் உயரத்தினை குறைத்திட தொழில்நுட்ப ரீதியாக வழிவகை உள்ளதா என்பதையும் மற்றும் வடிகாலில் கழிவுநீர் தேங்காவண்ணம் நிரந்தர தீர்வு காணும் வகையில் ஏதேனும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதையும் கண்டறிய பேரூராட்சிகளின் இயக்குநரக செயற் பொறியாளர் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து, அக்குழு நேரடியாக கள

ஆய்வு செய்து, அதன் அறிக்கையை உடனடியாக பெற்று அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 04-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. C. ஆனந்த்,
த/பெ. V. செல்லையா,
கதவு எண். 12-1-1- 13G2,
சௌடம்மன் கோவில் தெரு,
பஞ்சாயத்து போர்டு ஆபிஸ் பின்புறம்,
கோம்பை அஞ்சல் - 625 522, தேனி மாவட்டம்.
2) செயல் அலுவலர்,
கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் இயக்குர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/7/25
செயலாளர்
04/7/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032